2021 நிதி ஆண்டு தொடர்பான அரச கணக்குகள் குழுவின் (COPA) இரண்டாவது அறிக்கை

பாராமன்ற அமர்வு இல. – 290

பற்றிக், கைத்தறித் துணிகள் மற்றும் உள்ளூர் ஆடை உற்பத்திகள் இராஜாங்க அமைச்சு

❖ (தற்போது இப்பெயரில் ஓர் அமைச்சு இல்லை என்பதுடன், 2022.07.22 ஆம் திகதிய, 2289/43 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் நோக்கெல்லை (scope) கைத்தொழில் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.)

2021 ஆம் ஆண்டுக்குரிய அரச கணக்குகள் குழு இனங்கண்ட குறைபாடுகள்	குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நிறுவனம் எடுத்துள்ள நடவடிக்கைகள்
முதல் பகுதி 81.00	
இழப்புகளின் பதிவேடு இற்றைப்படுத்தி பேணப்பட்டிருக்கவில்லை.	2021 கணக்கு ஆண்டு தொடர்பில் இழப்புகளின் நட்டங்கள் எவையும் அறிக்கையிடப்படவில்லை. ஆதலால், பதிவேடு ஆரம்பிக்கப்படவில்லை என்பதுடன் இன்று அக்குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்டு இழப்புகளின் பதிவேடொன்று ஆரம்பிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றது.
சம்பளம் தயாரிப்பதற்கு கணினி மென்பொருள் ஒன்றுக்குரிய கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாற்றப்பட்டிருக்கவில்லை.	புதிதாக நிறுவப்பட்ட அமைச்சுக்கு பட்டதாரி பயிலுநர்கள் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தனர் ஆதலால், சம்பள மென்பொருளைப் பயன்படுத்தி சம்பளம் தயாரிக்கும் பணி பிரதான கணக்காளரினால் தனியாக மேற்கொள்ளப்பட்டமையால், கடவுச்சொற்கள் மாற்றப்பட்டிருக்கவில்லை. குறித்த அலுவலர்களுக்கு அந்த மென்பொருளைப் பயன்படுத்தல் பற்றிய முறையான ஒரு பயிற்சியை வழங்கி சம்பள விடயம் ஒப்படைக்கப்பட்ட பின் உரிய முறையில் 03 மாதங்களுக்கு ஒரு முறை கடவுச்சொற்களை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
குறைந்தபட்சம் இரண்டு கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களேனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	பற்றிக், கைத்தறித் துணிகள் மற்றும் உள்ளூர் ஆடை உற்பத்திகள் இராஜாங்க அமைச்சினதும் அதன் கீழ் இருந்த அரச நிறுவனங்களினதும் அலுவலர்கள் கொவிட் பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டமையால், அடிக்கடி மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக, கூட்டங்களை நடாத்த முடியாத நிலை காணப்பட்டது. அலுவலக அலுவல்கள் வழமைக்குத் திரும்பியதும் கூட்டங்களை உரிய முறையில் நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை பந்தி 13 இன் பிரகாரம் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு தகுந்த அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது 2021 ஆம் ஆண்டில் இடம்பெற்ற குறித்த வழுவை சீர்செய்து தகுந்த அலுவலர் ஒருவரை நியமித்து கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிவித்து அந்நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
ஆண்டுக்குரிய பொருள் கணக்கெடுப்பின் மூலம் தெரிய வந்த மேன்மிகை மற்றும் பற்றாக்குறை பற்றிய சிபார்சுகள் உரிய காலப்பகுதிகளில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.	கொவிட் பெருந்தொற்று பரவலுக்கு மத்தியில் அரச அலுவலகங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வரம்புகள் காரணமாக பொருள் மேன்மிகை மற்றும் பற்றாக்குறை சம்பந்தமான சிபார்சு நடவடிக்கைகள் தாமதமடைந்தன. இந்த வழுக்கள் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வாகனத்திற்கும் லொக் புத்தகங்கள் இற்றைப்படுத்திய அடிப்படையில் பேணப்பட்டிருக்கவில்லை.	இந்த வழு பற்றி தெரியவந்தவுடன் அது சம்பந்தமாக அவசிய நடவடிக்கை எடுத்து தற்போது ஒவ்வொரு வாகனத்திற்கும் லொக் புத்தகங்கள் இற்றைப்படுத்தி பராமரிக்கப்பட்டு வருகின்றது.
நிறுவனம் வசமுள்ள வாகனங்களில் எரிபொருள் தகனமடைதல் பற்றிய பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	கொவிட் பெருந்தொற்று நாட்டில் பரவியதும் நாட்டில் நிலவிய பொருளாதார, சமூக செயற்பாடுகளின் மட்டுப்பாட்டின் கீழ் எரிபொருள் தகனமடைதல் பற்றிய பரிசோதனைகளை மேற்கொள்வது சிரமமானதாக இருந்தமையால், உரிய முறையில் அந்நடவடிக்கைகள் நிறைவேற்றாமல் விடப்பட்டுள்ளபோதும், தற்போது அதற்கு உரிய நடவடிக்கை எடுத்து எரிபொருள் தகனமடைதல் பற்றிய பரிசோதனைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இரண்டாம் பகுதி 44.00	
பொதுமக்களினால் கோரப்படும் தகவல்களை வழங்குதல் / வழங்காமை தொடர்பான விபரங்கள் அடங்கிய பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.	அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டு பதிவேடுகளைப் பராமரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
முன்வைக்கப்படும் முறைப்பாடுகளைப் பதிவதற்கும், அவை சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளை விளக்குவதற்கும் உரிய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.	அவசியமான நடவடிக்கைகளை எடுத்து உரிய பதிவேடுகளைப் பராமரிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
இணையத்தளமொன்றை உருவாக்கி பேணப்பட்டிருக்கவில்லை.	அன்றைய இராஜாங்க அமைச்சு கைத்தொழில் அமைச்சின் ஒரு பிரிவாக நிறுவப்பட்ட பின் அவசிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இணையத்தளத்திற்கு அனைத்து தகவல்களையும் உட்படுத்தி இற்றைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
இணையத்தளம் மூலம் பொதுமக்களுக்கு முறைப்பாடுகளை அல்லது அவசியமான பதிவுகளை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கவில்லை.	அன்றைய இராஜாங்க அமைச்சு கைத்தொழில் அமைச்சின் ஒரு பிரிவாக நிறுவப்பட்ட பின் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டு சீர்செய்யப்பட்டுள்ளது.
நிறுவனம் தனது நோக்கெல்லைக்கு அமைய பேண்தகு நோக்கங்களை அடையாளம் கண்டிருக்கவில்லை.	அன்றைய இராஜாங்க அமைச்சு கைத்தொழில் அமைச்சின் ஒரு பிரிவாக நிறுவப்பட்ட பின் பேண்தகு நோக்கங்களை அடையாளம் காண்பது பற்றி அலுவலர்களை அறிவுறுத்துவதற்கு பயிற்சிச் செயலமர்வுகள் பலவற்றை ஒழுங்குசெய்து தற்போது அப்பிரிவுக்கு உரிய நோக்கெல்லைக்கு அமைய பேண்தகு நோக்கங்களை அறிமுகப்படுத்தியிருப்பதுடன், முன்னேற்றம் அடிக்கடி மேற்பார்வை செய்யப்பட்டு வருகிறது.
பேண்தகு நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அடைந்துகொள்ளப்பட வேண்டிய இலக்குகள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.	அன்றைய இராஜாங்க அமைச்சு கைத்தொழில் அமைச்சின் ஒரு பிரிவாக நிறுவப்பட்ட பின் அடைந்துகொள்ள வேண்டிய இலக்குகளை அடையாளம் காண்பது பற்றி அலுவலர்களை அறிவுறுத்துவதற்கு பயிற்சிச் செயலமர்வுகள் பலவற்றை ஒழுங்குசெய்து தற்போது அப்பிரிவுக்கு உரிய பேண்தகு நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அடைந்துகொள்ள வேண்டிய இலக்குகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

பேண்தகு நோக்கங்களை அளவிடுவதற்கு குறிகாட்டிகள் விதித்துரைக்கப்பட்டிருக்கவில்லை.	அன்றைய இராஜாங்க அமைச்சு கைத்தொழில் அமைச்சின் ஒரு பிரிவாக நிறுவப்பட்ட பின் பேண்தகு நோக்கங்களை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை விதித்துரைத்தல் பற்றி அலுவலர்களை அறிவுறுத்துவதற்கு பயிற்சிச் செயலமர்வுகள் பலவற்றை ஒழுங்குசெய்து தற்போது அப்பிரிவுக்கு உரிய பேண்தகு இலக்குகளை அளவிடுவதற்குரிய குறிகாட்டிகளை விதித்துரைத்து முன்னேற்ற மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
நிறுவனத்தின் பிரசைகள்/சேவைநாடிகள் பட்டயத்தை அமுல்படுத்தல் பற்றி மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதற்கான ஒரு முறைமை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டு பிரசைகள்/சேவைநாடிகள் பட்டயத்தை அமுல்படுத்துதல் பற்றிய மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு முறைமைகளை அறிமுகப்படுத்தி குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் பொறுப்புத்துறப்பு (disclaimer) அல்லது பாதகமான (adverse) மட்டத்தில் காணப்பட்டது.	2021 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் பெருந்தொற்று நிலைமைக்கு மத்தியில் அரச அலுவலகங்களின் நடவடிக்கைகளுக்கு மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதன் காரணமாகவும் அன்று நிலவிய சூழ்நிலையின் கீழ் முன்னுரிமைப் பணிகளை மாத்திரம் அடையாளம் கண்டு நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டதன் காரணமாகவும் குறைபாடுகள் காணப்பட்டபோதும் ஒட்டுமொத்தத்தில் தவறுகள், மோசடிகள் மற்றும் ஒழுங்கீனங்கள் எவையும் இடம்பெற்றிருக்கவில்லை.
முன்னேற்றத்தை அளவிடக்கூடிய 3 செயலாற்றுகைக் குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை.	தற்போது அக்குறைபாடுகளை சீர்செய்து செயலாற்றுகைக் குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

டாக்டர் ரமேஷ் பத்திரண (பா.உ)

கைத்தொழில் அமைச்சு.

Format (No. 01)

2021 நிதி வருடம் தொடர்பான அரச கணக்குகள் பற்றிய தெரிவுக்குழுவின் இரண்டாவது அறிக்கை

பாராளுமன்ற அமர்வு இல - 290

நிறுவனத்தின் பெயர் - பிரம்பு, பித்தளை, களி, மரத்தாலான பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

- தற்போது இந்தப் பெயரில் அமைச்சு இயங்கவில்லை என்பதுடன், 2022.07.22 ஆம் திகதிய 2289/43 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் விடயங்களுக்குப் பொறுப்பான கைத்தொழில் அமைச்சின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது)

2021ஆம் ஆண்டுக்குரியதாக அரச கணக்குகள் பற்றிய தெரிவுக்குழுவினால் அடையாளங்காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக நிறுவனத்தால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்
முதலாவது பகுதி - 93.00	
➢ உள்ளகக் கணக்காய்வுக் கோரிக்கைக்காக ஒரு மாதத்தினுள் பதில் வழங்கப்படாமை	தற்போது உள்ளகக் கணக்காய்வுக் கோரிக்கைகளுக்காக ஒரு மாதத்தினுள் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
➢ எல்லா வாகனங்களிலும் அரச இலச்சினை தீட்டப்பட்டிருக்காமை	அரசாங்க அமைச்சின் கீழ் உள்ள வாகனங்களில் அரச இலச்சினை தீட்டப்படுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதுடன், அமைச்சு மூடப்பட்டதால் உரிய நடவடிக்கையை முடிப்பதில் கால அவகாசம் இருக்கவில்லை. அதனால், தற்போது வாகனங்களில் அரச இலச்சினையைத் தீட்டுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.
➢ ஒரு வருடத்திற்கும் அதிகமான காலப்பகுதியில் காணப்படும் கடன் மீதிகள்.	இவ்வாறான கடன் மீதிகள் விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சின் விதாதா பிரிவானது பிரம்பு, பித்தளை, களி, மரத்தாலான பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ் இணைக்கப்பட்டிருந்தபோது காணப்பட்டவையாகும். தற்போது வரை இந்தக் கடன் மீதிகளை அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.
➢ அங்கீகரிக்கப்பட்ட கால அளவைக் கடந்தும் பணியாட் தொகுதியினரது ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டமை.	புதிய அபிவருத்தி அலுவலர்களை ஆட்சேர்த்த சந்தர்ப்பத்தில் சேவையின் தேவை கருதி, அபிவிருத்தி அலுவலர்கள் இணைக்கப்பட்டனர் என்பதுடன், பின்னர் பதவிகளுக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
இரண்டாவது பகுதி - 88.0	
➢ பிரசைகள்/சேவை பெறுவோர் பட்டயம் உரிய வகையில் தயாரிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படாது காணப்பட்டமை.	பிரசைகள்/சேவை பெறுவோர் பட்டயம் தயாரிக்கப்பட்டுள்ளது, ஆயினும் அமைச்சு மூடப்பட்டதால் அதை நடைமுறைப்படுத்துவதற்குரிய தேவை ஏற்படவில்லை.

➢ நிறுவனத்தில் பிரசைகள்/சேவை பெறுவோர் பட்டயம் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்பான மேற்பார்வை மற்றும் மதிப்பீடு பற்றிய முறைமையொன்று நிறுவனத்தால் தயாரிக்கப்படாமை.	மேற்பார்வை மற்றும் மதிப்பீடு பற்றிய முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருந்தாலும், அமைச்சு மூடப்பட்டதால் அதை நடைமுறைப்படுத்துவதற்குரிய தேவை ஏற்படவில்லை.

டாக்டர் ரமேஷ் பத்திரண, (பா. உ.)

கைத்தொழில் அமைச்சர்.

பாராளுமன்ற வெளியீடு வரிசை எண்- 290

நிறுவனத்தின் பெயர்- ரத்தினங்கள் மற்றும் நகைகள் தொடர்பான தொழில்துறையின் ,ராஜாங்க அமைச்சகம்.

ஆன்லைன் தகவல் மேலாண்மை அமைப்பு மூலம் அரசு நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அரசாங்கங்களின் நிதி இணக்கம் மற்றும் செயல்பாட்டு செயல்திறன் மதிப்பீடு - FY 2021

முதல் பகுதி

துணை எண்	குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகள் மற்றும் தற்போதைய நிலையை சரிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
1	நிலையான சொத்து பதிவு புதுப்பித்த நிலையில் வைக்கப்படவில்லை.	2022 ஆம் ஆண்டு முதல், நிலையான சொத்துப் பதிவு புதுப்பித்த நிலையில் பராமரிக்கப்படும்.
2	தணிக்கை வினவல் பதிவேடு இன்றுவரை பராமரிக்கப்படவில்லை.	தணிக்கை வினவல் பதிவேடு 2022 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பராமரிக்கப்படும்.
3	M.R.134(2) இன் படி உள் தணிக்கை அறிக்கைகளின் நகல்கள் ஆடிட்டர் ஜெனரலுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	9 மே 2022 அன்று ரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் தொடர்பான ,ராஜாங்க அமைச்சகம் ரத்து செய்யப்பட்டு தற்போது கைதொழில் அமைச்சகத்தின் கீழ் ஒரு பிரிவாக செயல்படுகிறது மற்றும் உள் தணிக்கை அறிக்கைகளின் நகல்கள் ஆடிட்டர் ஜெனரலுக்கு அனுப்பப்படுகின்றன.
4	6/26/2017 ஆம் திகதிய 1/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் திகதியின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் அபகரிக்கப்பட்ட சொத்துக்கள் குறித்த தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.	2020 ஆகஸ்ட் 30 அன்று ரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் தொடர்பான ,ராஜாங்க அமைச்சகம் நிறுவப்பட்டது, மேலும் 2018 இல் கொள்முதல் அல்லது முறைகேடுகள் எதுவும் நடைபெறவில்லை. தற்போது கைத்தொழில் அமைச்சகத்தின் கீழ் ஒரு பிரிவாகச் செயல்படும், அனைத்து சொத்துக் கொள்முதல் மற்றும் முறைகேடுகள் குறித்து கன்ட்ரோலர் ஜெனரலுக்குப் புகாரளிக்கப்படுகிறது. உள்ளது.
5	தற்போதைய நிர்வாகச் சுற்றறிக்கை எண். 1/2017 தேதியிட்ட 26/6/2017 இன் படி, சுற்றறிக்கையின் உத்தரவுகளை அமுல்படுத்துவதை ஒருங்கிணைக்க, தகுந்த அதிகாரி நியமிக்கப்பட்டு, தலைமைக் கட்டுப்பாட்டு அலுவலகத்திற்கு அறிவிக்கப்படவில்லை.	2021ல் இப்பணிகள் முடிவடையவில்லை ஆனால் 2022ல் ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டு கன்ட்ரோலர் ஜெனரலுக்கு அறிக்கை அளிக்கப்பட்டது.
6	வாகனங்களின் உரிமையை உறுதிப்படுத்தும் கடிதங்கள் தயாரிக்கப்படவில்லை.	இது தொடர்பான பணிகள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.
7	வாகனங்களில் அரசு சின்னம் வர்ணம் பூசப்படவில்லை	தற்போது கைதொழிy; அமைச்சகத்தின் கீழ் ஒரு பிரிவாக, இருப்பு வாகனங்களுக்கு மாநில சின்னத்தை வர்ணம் பூசும் பணி நடைபெற்று வருகிறது.
8	வாகனங்களின் எரிபொருள் பயன்பாட்டை சரிபார்க்க தவறியது	தற்போது கைத்தொழில் அமைச்சின் முதன்மை தொழில் பிரிவாக இருக்கும் இந்த பிரிவில் 2 இருப்பு வாகனங்கள் உள்ளன, அவற்றில் ஒன்று எரிபொருள் நுகர்வுக்காக சோதிக்கப்பட்டது. எஞ்சிய வாகனங்கள் மற்றும் முதன்மைத்

		தொழில்துறை அமைச்சருடன் இணைக்கப்பட்ட வாகனங்கள் எரிபொருள் பயன்பாட்டை சரிபார்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.
9	வங்கி சமரச அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, சான்றளிக்கப்பட்டு, உரிய தேதிக்குள் தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	டிசம்பர் 2023 வரையிலான அனைத்து வங்கி சமரச அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டு, தணிக்கையாளர் ஜெனரலுக்கு நகல்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
	இரண்டாம் பகுதி	
10	இணையதளத்தை உருவாக்கி பராமரிக்கவில்லை	இராஜாங்க அமைச்சுக்கான இணையத்தளத்தை உருவாக்குவதற்கான ஆரம்பகட்ட பணிகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அரச அமைச்சு நீக்கப்பட்டதால் பணிகள் நிறுத்தப்பட்டன. தற்போது கைத்தொழில் அமைச்சின் கீழ் ஒரு பிரிவாக உள்ளதால், இப்பிரிவு தொடர்பான தகவல்கள் இணையதளத்தில் காட்டப்பட்டுள்ளன.
11	குடிமகன்/வாடிக்கையாளர் சாசனம் சரியாக தயாரிக்கப்படவில்லை	குடிமகன் / வாடிக்கையாளர் சாசனம் தயாரிக்கப்பட்டது.
12	மனிதவளத் திட்டம் தயாரிக்கப்படவில்லை	மனித வள திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
13	ஊழியர்களுடன் செயல்திறன் ஒப்பந்தங்களில் கையெழுத்திடவில்லை	செயல்திறன் ஒப்பந்தங்களை உருவாக்கியது மற்றும் ஊழியர்களுடன் செயல்திறன் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது.
14	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளிலிருந்து 50% க்கும் குறைவான பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன	2023 ஆம் ஆண்டில், முதன்மைத் தொழில் துறையால் திட்டமிடப்பட்ட அனைத்து பயிற்சித் திட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன.
15	நிறுவனத்தின் கணக்குகள் மீதான தணிக்கை கருத்து தகுதியற்றதாக அல்லது பாதகமாக இருந்தது.	ஆடிட்டர் ஜெனரல் 2021 ஆம் ஆண்டில் தணிக்கை செய்யப்பட்ட கருத்தை சமர்ப்பித்துள்ளார். அதில் காட்டப்பட்ட குறைபாடுகள் தற்போது சரி செய்யப்பட்டுள்ளன.

ஒப்பம்/டாக்டர் ரமேஷ் பத்திரண (பா.உ),
கைத்தொழில் அமைச்சர்.
கைத்தொழில் **அமைச்சகம்.**

படிவம் (இலக்கம் 01)
பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் :- 290
நிறுவனத்தின் பெயர் :- கம்பெனிகள் பதிவாளர் திணைக்களம்

முதலாம் பகுதி : 94.00

	குழுவினால் கண்டறியப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள்	குறைபாடுகளை திருத்துவதற்காக நறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் / தற்பொழுதைய நிலை
1	வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பின் போது கண்டறியப்பட்ட மேலதிகங்கள், பற்றாக்குறைகள் பற்றிய பரிந்துரைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்தமை	2021 ஆம் ஆண்டு பொருட்கள் கணக்கெடுப்பின்போது அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்ட பொருட்களை ஏலமிடுவதற்காக விலை நிர்ணயக் குழு 2022.03.15 ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளது. விலை நிர்ணயக் குழுவின் பரிந்துரைகள் 2022.12.09 ஆம் திகதி சமர்பிக்கப்பட்டுள்ளது. அப் பொருட்கள் அரச நிதி முறைமை 747 இன் பிரகாரம் விற்பனை செய்வதற்காக அமைச்சின் செயலாளரின் அனுமதிக்கு 2022.12.14 ஆம் திகதி சமர்பிக்கப்பட்டதன் பின்னர் 2022.12.27 ஆம் திகதி அப் பொருட்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் கிடைக்கப்பெற்ற ரூபா. 211,260/= தொகை வருவாய்க்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.
2	இருப்பு வாகனங்கள் சம்பந்தமான நாளாந்த ஓட்டுநனர் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த அறிக்கைகள் கணக்காய்வாளருக்கு சமர்பிக்கப்படாமை	சாரதிகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு முறையாக நாளாந்த ஓட்டுநனர் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த அறிக்கைகள் கணக்காய்வாளருக்கு அனுப்பப்படுகின்றது.
3	ஒரு வருடத்திற்கும் அதிக காலமாக நிலுவையில் உள்ள நிலுவைக்கடன் மீதிகள்	நிலுவைக்கடன் மீதிகளை சரி செய்வதற்கு அரச கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. <u>இடமாற்றம் பெற்றுச் சென்ற</u> திரு. டி.எம்.வீ பீரிஸ் - சட்டமா அதிபர் திணைக்கம் - (1989.01.17) - රු. 10,935.00 செல்வி எம்.ஜி மத்தும பண்டார – வலஸ்முல்ல மாகானக் கல்விக் காரியாலயம் - (2000.09.02)- රු. 32,540.00 திரு. கே.கே.டி.ஆர்.ஏ ஹேமசந்திர – திட்ட அமுலாக்க அமைச்சு (1998.07.01)- රු. 77,266.00 <u>ஓய்வு பெற்ற</u> திருமதி டப். ஏ. டி. எஸ். விஜேதுங்க அவர்களின் கடன் நிலுவையான ரூபா. 200,200.00 தொகை தேர்தல்கள் காரியாலயத்தில் கடமை புரியும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் திருமதி எம். டப். எம். எம். கே. விஜேரத்ன அவர்களிடமிருந்து 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் ரூபா. 2,250.00 மற்றும் உறிய வட்டித் தொகையுடன் மாதாந்தம் அறவிடப்படுகின்றது. <u>பதவி விலகிய</u> திரு. கே.ஏ ப்ரநாந்து அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 17,000.00 கடன் நிலுவைக்காக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக திணைக்களத்தின் சட்டப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது.
4	அனைத்து ஊழியர்களுக்கும் எழுத்து மூலமான கடமைப் பட்டியல்கள் வழங்கப்பட்டிருக்காமை	தற்சமயம் அனைத்து ஊழியர்களுக்கும் எழுத்து மூலமான கடமைப் பட்டியல்கள் வழங்கப்பட்டுள்ளன.

படிவம் (இலக்கம் 01)
பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் :- 290
நிறுவனத்தின் பெயர் :- கம்பெனிகள் பதிவாளர் திணைக்களம்

இரண்டாம் பகுதி : 75.00

	குழுவினால் கண்டறியப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள்	குறைபாடுகளை திருத்துவதற்காக நறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் / தற்பொழுதைய நிலை
1	அரச நிர்வாக ஏற்பாடுகளுக்கு அமைய முறையாகத் தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காமை.	மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.
2	அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய செயல்திறன் ஒப்பந்தங்களை தயாரித்து கைச்சாத்திடப்படாமை.	துற்பொழுது செயல்திறன் ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றது.
3	முனிதவள மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் திறன் மற்றும் நிபுனத்துவ வளர்ச்சி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் நிறுவனத்தினுள் மூத்த உத்தியோகத்தர் ஒருவர் பெயர் குறிப்பிடப்படாமை.	இதற்காக கம்பெனிகள் உதவிப் பதிவாளர் ஜனரால் திரு ஆர்.ஆர்.எஸ்.ஸி ரத்னாயக அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.
4	திட்டமிடப்பட்ட பயிற்சிச் சந்தர்ப்பங்களில் 50% ற்கும் குறைவான அளவு பயிற்சிகளே வழங்கப்பட்டிருந்தமை.	2021 ஆம் ஆண்டு நிலவிய கோவிட் பரவல் நிலை காரணமாக பயிற்சி நடவடிக்கைகளுக்கு ஊழியர்களை ஒன்று கூட்ட முடியாத நிலை ஏற்பட்டமையினால் வகைப்படுத்தல் அமைப்பு மூலம் அத்தியாவசியமான பயிற்சிப் பட்டறைகள் மாத்திரம் நடாத்தப்பட்டன.

ஒப்பம்/டாக்டர் ரமேஷ் பத்திரண (பா.உ),
கைத்தொழில் அமைச்சர்.

பாராளுமன்ற தொடர். இல. 290

நிறுவனத்தின் பெயர் – புடவைக் கைத்தொழில் திணைக்களம்

இணையவழி தகவல் முகாமைத்துவ முறைமையினூடாக அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் தொழிற்பாட்டு செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல் - நிதியாண்டு 2021

துணை எண்	குழுவால் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள்	குறைபாடுகள் மற்றும் தற்போதைய நிலையை சரி செய்ய நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
1.	உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமானது நிதிப்பிரமாணம் 134(2)ற்கமைவாக தயாரிக்கப்பட்டு கணக்காய்வதியதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை	பொது நிர்வாக அமைச்சிற்கு பல தடவைகள் உள்ளக கணக்காய்வாளர் நியமனம் தொடர்பாக கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை. இதனால் கைத்தொழில் அமைச்சின் செயலாளரினால் உள்ளக ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டு 02.08.2023 முதல் கைத்தொழில் அமைச்சின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உள்ளக கணக்காய்வாளருக்கு புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்கான உள்ளக கணக்காய்வு செயல்பாடுகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அதன்படி உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமானது தயாரிக்கப்பட்டு கணக்காய்வதியதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
2.	குடிமக்கள் சேவைக்கான சாசனம் உரியமுறையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை	குடிமக்கள் சேவைக்கான சாசனம் முறையாகத் தயாரிக்கப்பட்டு பின்தொடர்தல் மற்றும் தேவையான திருத்தங்களுக்காக ஒரு குழு நியமிக்கப்பட்டு அதன்படி செயல்பட்டுகின்றது.
3.	அனைத்து அலுவலர்களுக்குமான செயற்பாட்டு ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை	செயற்பாட்டு ஒப்பந்தங்கள் வரைவு செய்யப்பட்டு அலுவலர்களிற்கு ஒதுக்கப்பட்ட கடமைகள் புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டுள்ளன.
4.	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களில் வழங்கப்பட்ட பயிற்சிகளின் அளவானது 50% இனை விட குறைவாக காணப்பட்டமை.	திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட அனைத்து அவசியமான பயிற்சித் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

வைத்தியர். ரமேஸ் பத்திரண
கைத்தொழில் அமைச்சர்
கைத்தொழில் அமைச்சு